# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-25** **தேதி:-21.07.2010**

## நிர்வாகத்தின் அக்கறையற்ற போக்கிற்கு எதிராக...

புதிய ஊதிய மாற்றம் மற்றும் ஊழியர்களின் பதவி உயர்வு கொள்கை ஆகியவற்றை அமுலாக்குவது தொடர்பாக பல கோரிக்கைகள் BSNL நிர்வாகத்திடம் முன் வைக்கப்பட்டு உள்ளது. தலமட்டங்களில் இருந்து கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு நிர்வாகம் பதிலளிக்க வில்லை. மேலும் மாற்றங்கள் தொடர்பான நமது கோரிக்கைகளும் ஏற்கப் படவில்லை. எனவே பதவி உயர்வு கொள்கையின் பலன்கள் ஊழியர்களுக்கு மறுக்கப்படுகிறது. உடனடியாக பிரச்சனைகள் தீர்க்கப்படுவதற்கு நாம் எடுத்த முயற்சிகள் பலன் தரவில்லை. மற்ற பல பிரச்சனைகள் தீர்க்கப்படாததால் ஊழியர்களுக்கு ஏற்படும் சிரமங்களை நிர்வாகம் புரிந்து கொள்வதில்லை. எனவே 20.07.2010ல் கூடிய United Forum கூட்டத்தில் கீழ்கண்ட போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளது.

**> 05.08.2010 : அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம்.**

**> 12.08.2010 : தர்ணா.**

எனவே மாவட்ட மட்டங்களில் போராட்டங்களை நடத்துவது தொடர்பாக விவாதிக்கவும், அமுல் படுத்தவும் உடனடியாக United Forum கூட்டங்களை கூட்டி செயல்படுவது அவசியம். நமது கோரிக்கைகளை உடனடியாக வென்றெடுக்க மேலே தெரிவிக்கப்பட்ட இயக்கங்களை மிக சக்தியாக, வெற்றிகரமாக நடத்திட வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**S.செல்லப்பா**
**மாநில செயலர்.**